# பிரம்ம சூத்திரம்

**செ.தவமணி**
முனைவர் பட்ட ஆய்வாளர்
விஷன் பார் விஸ்டம்
ஆழியார்

**முனைவர் பூங்குன்றன்**
முதல்வர், மதர் தெரஸா கலை அறிவியல் கல்லூரி
இலுப்பூர்

**மலர்:** 3

**இதழ்:** 2

**தொகுதி:** II

**மாதம்:** அக்டோபர்

**வருடம்:** 2018

**ISSN:** 2454-3993

**ஆய்வுச் சுருக்கம்**

வேதங்கள் மற்றும் உபநிடதங்களில் உள்ளவற்றை கண்டு அறியும் வழிமுறைகளே தரிசனங்கள் எனப்படுகிறது. தரிசனங்கள் நியாயம், வைசேஷிகம், சாங்கியம், யோகம், மீமாம்சம், வேதாந்தம் என்று ஆறு வகையாக உள்ளன. வேதாந்தத்திலுள்ள கருத்துக்களை நிரூபிப்பதற்காக பாதராயண வியாசரால் இயற்றப்பட்டதே பிரம்ம சூத்திரமாகும். இதிலிலுள்ள இரண்டாவது சூத்திரம் 'யாரிடமிருந்து இந்தப் படைப்பு முதலியவை தோன்றினவோ அவரே இறைவன்' என்கிறது. பிரம்ம சூத்திரத்தை தகுந்த ஆசிரியர் துணையின்றி புரிந்து கொள்வது சிரமம். அதனால் அதற்கு விளக்கவுரைகள் பல ஆச்சாரியப் பெருமக்களால் எழுதப்பட்டன. அவர்களுள் தலைசிறந்தவராகக் கருதப்படுபவர் ஆதி சங்கரர் ஆவார். அவர் இயற்றிய விளக்கவுரை 'பிரம்ம சூத்திர பாஷ்யம்' என அழைக்கப்படுகிறது. ஆதி சங்கரருடைய பாஷ்யமே காலத்தால் முற்பட்டது என்று சொல்லப்படுகிறது. புதிய தத்துவமான அத்வைத வேதாந்தத்தை நிறுவி உலகம் முழுவதும் பரப்பியவர். உலகம் பொய். இல்லாத ஒன்றை இருப்பதுபோல காண்கின்றோம் என்பது ஆதி சங்கரருடைய வாதம். இதற்கு அவர் கூறும் விளக்கம் விவர்த்தவாதம் என அழைக்கப்படுகிறது. கயிறு பாம்பாகக் காணப்படுவதைப் போல உலகம் தோன்றுகின்றது என்று ஆதி சங்கரர் கூறுகிறார். காரண காரிய வாதத்தின்படி இறைவன் இருப்பது உண்மை என்பதும் அவரால்தான் பிரபஞ்சம் தோன்றி நிலைபெற்றிருக்கிறது என்பதும் உறுதியாகிறது. இறைவனே இந்த உலகத்தின் நிமித்த காரணமாகவும் உபாதானக் காரணமாவும் இருக்கிறார் - அவரே படைத்தார். அவரிலிருந்தே படைத்தார். இந்த உலகம் இருப்பது அதன் பின்னால் இறைவன் ஒருவர் இருப்பதைச் சுட்டிக்காட்டுகிறது என்பதை இந்த சூத்திரம் கூறுகிறது. இந்த உலகையும் உயிர்களையும் அவற்றின் அமைப்பையும் காட்டி இத்தகைய அற்புதமான உயிர்களையும் உலகையும் படைத்ததன் காரணமாக இறைவன் எல்லாம் அறிந்தவர் (ஸர்வஜ்ஞ:) எல்லாம் வல்லவர் (ஸர்வ சக்திமான்) என்று விளக்குகிறார் உரையாசிரியர் ஆதி சங்கரர். இந்த உலகம் எண்ணற்ற உருவங்களாலும் பெயர்களாலும் உருவாக்கப்பட்டது. எண்ணற்ற அனுபவங்களைப்

பெறுகின்ற எண்ணற்ற உயிர்களை உடையது. ஒவ்வோர் அனுபவமும் குறிப்பிட்ட இடத்தில் குறிப்பிட்ட காலத்தில் குறிப்பிட்ட காரணத்திற்காக நடைபெறுகின்ற தன்மை உடையது. சிந்தனைக்கும் எட்டாத எண்ணற்ற அமைப்புகளுடன் கூடியது என்ற உலகத்தின் நான்கு இயல்புகளைக் கூறி இரண்டாவது சூத்திரத்தை விளக்குகிறார் ஆதி சங்கரர்.

**முக்கிய வார்த்தைகள்:** பிரம்ம சூத்திரம், ஆதி சங்கரர், விவர்த்த வாதம், கயிறு-பாம்பு.

**முன்னுரை**

இந்திய தத்துவ தரிசனங்களில் ஒன்றான வேதாந்த கருத்துக்களை மெய்ப்பிப்பதற்தற்காக பாதராயண வியாசரால் எழுதப்பட்டதே பிரம்ம சூத்திரம் என்ற நூல். இதிலுள்ள இரண்டாவது சூத்திரத்தை ஆராய்வதே இக்கட்டுரையின் நோக்கமாகும். பிரம்ம சூத்திரங்கள் சுருங்கிய சிறிய வாக்கியங்களாக இருந்தாலும் அதற்குப் பல்வேறுபட்ட தர்க்க ரீதியான விளக்கங்களை பல்வேறு ஞானிகள் விளக்கவுரையாக வழங்கியுள்ளார்கள். ஆதி சங்கரர் இந்த இரண்டாவது சூத்திரத்திற்கு எவ்வாறு விளக்கமளித்துள்ளார் என்பதை இக்கட்டுரையில் காண்போம்.

**பிரம்ம சூத்திரம்**

வேதங்களிலும், உபநிஷத்துக்களிலும் கூறப்பட்டவைகளுக்கு மேலும் விளக்கம் அளிப்பதற்காகவும், அவற்றில் உள்ள கூற்றுக்களை மெய்ப்பிப்பதற்காகவும் பல ரிஷிகளால் இயற்றப்பட்டவையே ஸ்ம்ருதி, இதிகாசம், புராணம் மற்றும் ஆகமங்களாகும்.

வேதங்கள் மற்றும் உபநிடதங்களில் உள்ளவற்றை கண்டு அறியும் வழிமுறையே தரிசனங்கள் எனப்படுகிறது. ஷட் தரிசனங்கள் என்று ஆறு வகையாகப் பிரிக்கப்பட்டவை: நியாயம், வைசேஷிகம், சாங்கியம், யோகம், மீமாம்சம், வேதாந்தம் என்பவை ஆகும். இந்த ஆறு தரிசனங்களிலுள் மீமாம்சத்திற்கும் வேதாந்தத்திற்கும் இடையில் சற்றே தொடர்பு இருக்கிறது. எனவே மீமாம்சத்தை பூர்வ மீமாம்சம் என்றும் வேதாந்தத்தை உத்தர மீமாம்சம் என்றும் கூறுவர்.

மீமாம்சம் என்ற சொல்லுக்குப் புனித நூல்களில் உள்ளவற்றை ஆராய்தல் என்று பொருள். பூர்வ மீமாம்சம் வேதத்திலுள்ள கர்ம மற்றும் உபாசன காண்டம் குறித்து ஆராய்கிறது. உத்தர மீமாம்சம் என்கிற வேதாந்தத்தில் வேதங்களின் பிற்பகுதியான ஞான காண்டம் குறித்து ஆராயப்பட்டுள்ளது. வேதாந்தத்திலுள்ள கருத்துக்களை நிரூபிப்பதற்காக பாதராயண வியாசரால் இயற்றப்பட்டதே பிரம்ம சூத்திரமாகும். இதில் நான்கு அத்தியாயங்கள் உள்ளன. நான்கு அத்தியாயங்களும் நான்கு, நான்கு பாதங்களாகப் பிரிக்கப்பட்டுள்ளன. ஒவ்வொரு பாதத்திலும் பல்வேறு தலைப்புகள் விவாதிக்கப்படுகின்றன. தலைப்பு அதிகரணம் எனப்படுகிறது. ஒரு அதிகரணத்தில் ஒன்று அல்லது ஒன்றிற்கு மேற்பட்ட சூத்திரங்கள் காணப்படுகின்றன. அவற்றுள் இரண்டாவது அதிகரணத்தில் ஒரே ஒரு சூத்திரம் உள்ளது. அந்த இரண்டாவது சூத்திரம் ஆய்வு செய்யப்படுகிறது.

**இரண்டாவது சூத்திரம்**

பாதராயண வியாசர் எழுதிய பிரம்ம சூத்திரத்தின் இரண்டாவது சூத்திரம் 'ஜன்ம ஆதி அஸ்ய யத:' என்பது. (ஜன்ம ஆதி – படைத்தல் முதலியவை, அஸ்ய - இந்த, யத: - யாரிடமிருந்து) இதன் தமிழ் வடிவம் 'யாரிடமிருந்து இந்தப் படைப்பு முதலியவை தோன்றினவோ அவரே இறைவன்'1 என்பது. யத: - எதனிடமிருந்து (யாரிடமிருந்து). எதனிடமிருந்து இந்த ஜெகத்தினுடைய ஜன்மம் முதலியன தோன்றியதோ அது பிரம்மம் என்று இரண்டாவது சூத்திரத்திற்கு ஆதி சங்கரர் பொருள் கூறுகிறார். முதலாவது சூத்திரத்தில் மோட்சம் அடைய விரும்புபவர்களால் பிரம்மம் தேடப்பட வேண்டும் என்று நிர்ணயம் செய்யப்பட்டு விட்டதால், இரண்டாவது சூத்திரத்தில் பிரம்மத்தைப் பற்றிய லட்சணத்தைக் (அடையாளம்) கூறுகிறார் வியாசர் என்கிறார் ஆதி சங்கரர்.

'படைப்பு முதலியவை' என்றால் படைத்தல், காத்தல், ஒடுக்குதல் ஆகிய முத்தொழில்களைக் குறிப்பதாகும். நாம் காணும் இந்தப் பிரபஞ்சம் யாரிடமிருந்து தோன்றி, யாரிடம் நிலைபெற்று, யாரில் ஒடுங்குகிறதோ அவரே இறைவன் என்ற கருத்தை நிலைநிறுத்துகிறார் பாதராயணார்.

இந்த உலகம் தோன்றிய விதத்தை இன்றைய அறிவியலால் அறிந்து கொள்ள முடியாது. அதனுடைய ஒவ்வொரு கண்டுபிடிப்பும் முந்தைய கருத்தை முறியடித்து ஒரு புதிய கருத்தை முன்வைக்கிறது. எனவே தெளிவான முடிவை எட்டும்வரை வேத, உபநிடதங்களில் கூறியவற்றை ஆராய்வதே சிறந்தது. பிரம்ம சூத்திரம் உலகம் தோன்றியவிதத்தை விவரிக்கிறது.

**ஆதி சங்கரர்**

பிரம்ம சூத்திரத்தை தகுந்த ஆசிரியர் துணையின்றி புரிந்து கொள்வது சிரமம். அதனால் அதற்கு விளக்கவுரைகள் பல ஆச்சாரியப் பெருமக்களால் எழுதப்பட்டன. அவர்களுள் தலைசிறந்தவராகக் கருதப்படுபவர் ஆதி சங்கரர் ஆவார். அவர் இயற்றிய விளக்கவுரை ‘பிரம்ம சூத்திர பாஷ்யம்’ என அழைக்கப்படுகிறது.

பாஷ்யம் என்றால் மூலத்திற்கு உரைநடையில் எழுதப்பட்ட விளக்கவுரை என்பது பொருள். ஆங்கிலத்தில் இதை commentary என்பர். ஆனந்தகிரி என்ற மகான் ஸ்ரீசங்கரர் எழுதிய பாஷ்யங்களுக்கு, வாக்கியங்களுக்கு வாக்கியம் ஸ்ரீசங்கரரின் மனதில் இருந்தது என்ன என்று விளக்கம் கொடுத்துள்ளார். விளக்கவுரைக்கு விளக்கம் எழுதுவதை ‘டீக்கா’ என்பார்கள். இதையும் சில மகான்கள் செய்துள்ளனர். ‘டீக்கா’ புரியவில்லை என்பதால் அதற்கும் விளக்கம் எழுதியுள்ளனர் அவர்களது சீடர்கள். இவைகளுக்கு ‘டிப்பாணி’ என்று பெயர். எனவே மூலம், மூலத்திற்கு விளக்கம் பாஷ்யம், பாஷ்யத்திற்கு விளக்கம் டீக்கா, டீக்காவிற்கு விளக்கம் டிப்பாணி என்ற ரீதியில் விளக்கவுரைகள் ஏராளம் உள்ளன.

ஸ்ரீசங்கரருடைய பாஷ்யமே காலத்தால் முற்பட்டது என்று சொல்லப்படுகிறது. அவருடைய காலம் 788 A.D. என்றும், அவர் 32 வயது வரை மட்டுமே வாழ்ந்ததாகவும் சொல்லப்படுகிறது. ஆனால் இந்த குறுகிய வாழ்நாளில் அவர், செய்த சாதனை மகத்தானது. புதிய தத்துவமான அத்வைத வேதாந்தத்தை நிறுவி உலகம் முழுவதும் பரப்பியவர். “தமது அதிகூர்மையான மதிநுட்பத்தினால் மாபெரும் மதமொன்றைத் தாபித்த இச்சங்கரரது வாழ்க்கை வரலாறு எவரையும் பிரமிக்கச் செய்ய வல்லது. இவர் தென்னிந்தியாவில் காலடி என்னும் இடத்தில் பிறந்தவர். இவரது காலம் 6ஆம் நூற்றாண்டு எனச் சிலரும், 8ஆம் நூற்றாண்டு எனச் சிலரும் கூறுவர். இவர் வாழ்நதது ஆக 32 ஆண்டுகள்தாம். இக்குறுகிய கால எல்லையுள் இவர் இயற்றிய நூல்களும் சாதித்த சாதனைகளும் நிகரற்றவை. தத்துவ ஞான உலகிலே இவருக்கு நிகராகக் குறிப்பிடத்தக்கவர் வேறொருவர் இலர் என்பது அறிஞர் கருத்து.”[2] என்று ‘இந்திய தத்துவ ஞானம்’ என்ற நூலின் ஆசிரியர் கி.லட்சுமணன் கூறுகிறார். பிரம்ம சூத்திரத்தின் ஆசிரியர் பாதராயண வியாசரே ஆதி சங்கரராக அவதரித்து தனது சூத்திரங்களை சரிபார்த்துக் கொண்டார் என நம்பப்படுகிறது.

ஸ்ரீசங்கரர் காலத்தில் புத்தமதம் மேலோங்கி இருந்தது. அன்னியப் படையெடுப்புகள் நம் கலாச்சாரத்தை வெகு சுலபமாகச் சீரழித்து, கொலைவெறி கொண்ட ஆக்கிரமிப்பு மதங்களும் பரவி வந்தன. இத்தகைய விபரீதமான நிலையிலிருந்து வேதம், உபநிடதங்கள், பகவத் கீதை, ரிஷிகள் வாக்கு ஆகியவற்றின் அடிப்படையில் வேதத்தை எதிர்த்து வந்த மதங்களைத் தர்க்க ரீதியில் தகர்த்தெறிந்து, அத்துடன் கர்ம-ஞான-பக்தி-யோகங்கள் அடங்கிய முழுமையான வேதாந்த மார்க்கத்தை நிலைநிறுத்தி நம் சனாதன தருமத்தை மீட்டுத் தந்த சமயப் பெரியோர்களில் முதன்மையானவராக ஸ்ரீசங்கரர் திகழ்கிறார்.

பகவத் கீதை, உபநிடதங்கள், பிரம்ம சூத்திரம் ஆகியவற்றிற்கு ஒப்பற்ற பாஷ்யங்கள் எழுதியதோடு மட்டுமல்லாமல் பாரதமெங்கும் பயணம் மேற்கொண்டு உயர்வு தாழ்வு பாரா எளிய பக்தி மார்க்கத்திற்கும் வித்தட்டார் என்று சொல்லலாம்.

**ஆதி சங்கரர் விளக்கம் - விவர்த்தவாதம்**

உலகம் பொய். இல்லாத ஒன்றை இருப்பதுபோல காண்கின்றோம் என்பது ஆதி சங்கரருடைய வாதம். இதற்கு அவர் கூறும் விளக்கம் விவர்த்தவாதம் என அழைக்கப்படுகிறது. “ஒரு பொருள் இன்னொன்றாக மாறாமலிருந்தபடியே மாறிவிட்டதாகக் காணப்படுவதற்கு விவிர்த்தவாதம் என்று பெயர். இது வேதாந்தத்துக்கு மிக முக்கியமானது. உதாரணம் மூலம் இதனை விளக்குவதாயின் கயிறு பாம்பாகக் காணப்படுவதைக் கூறலாம். வேதாந்திகள் மிகுதியும் கையாளுவதும் இந்த

உவமையையே. கயிறு பாம்பாக உண்மையில் மாறவில்லை, ஆனால் மாறிவிட்டதாகக் காணப்படுகின்றது. அதுபோலவே, பிரம்மமும் உண்மையில் உலகாக மாறாமலே மாறிவிட்டதாகக் காணப்படுகின்றது. சங்கரர் கண்டுபிடித்த இந்த விவர்த்தவாதம் மிக விசித்திரமானது. இதன்படி காரணம் மட்டுமே உண்மை. அக்காரணத்திலிருந்து வரும் காரியம் உண்மையல்ல. காரணமாகிய கயிறு உண்மை. அதிலிருந்து தோன்றிய காரியமாகிய பாம்பு உண்மையல்ல. காரணமாகிய பிரம்மம் உண்மை. அப்பிரம்மத்திலிருந்து தோன்றிய காரியமாகிய உலகம் அவ்வளவு உண்மையல்ல."[3] என்கிறார் ஆதி சங்கரர்.

**காரண காரிய வாதம்**

ஒரு பொருள் இருக்கிறதென்றால் அதற்குக் காரணம் ஒன்று இருந்தாக வேண்டும். இது நியதி. நாற்காலி ஒன்று இருக்குமானால் அதைச் செய்தவன் ஒருவன் இருப்பான். அதுபோலவே இந்தப் பிரபஞ்சம் இருக்கிறது என்றால் அதைப் படைத்த ஒருவர் இருந்தேயாக வேண்டும். அந்த ஒருவர் இறைவன். எனவே இறைவன் இருப்பது உறுதி. அவர் இந்த உலகைப் படைத்தார் என்பதை இந்த சூத்திரம் உறுதி செய்கிறது. காரியம் என்பது உலகம். காரணம் என்பது இறைவன். காரண காரிய வாதத்தின்படி இறைவன் இருப்பது உண்மை என்பதும் அவரால்தான் பிரபஞ்சம் தோன்றி நிலைபெற்றிருக்கிறது என்பதும் உறுதியாகிறது.

**நிமித்த காரணம் உபதான காரணம்**

இறைவன் உலகைப் படைத்தார் என்னும்போது அவர் இந்த உலகிற்கு நிமித்த காரணமா அல்லது உபாதான காரணமா? இரண்டுமே அவர்தான் என்று உபநிஷதங்கள் (முண்.1:1.7) கூறுகின்றன. இதற்கு சிலந்தி வலை பின்னுவதை உதாரணமாகக் காட்டுகின்றன. வலையைப் பின்னுவது சிலந்தி (நிமித்த காரணம்) வலைக்கான மூலப்பொருளை அது எங்கிருந்து கொண்டு வருகிறது? தன்னிலிருந்தே (உபாதான காரணம்). தன்னிலிருந்தே மூலப்பொருளைக் கொண்டுவந்து அது வலை பின்னுகிறது. அதாவது வலைக்கான இரண்டு காரணங்களாகவும் சிலந்தியே இருக்கிறது. அதுபோலவே இறைவனும் இந்த உலகம் மற்றும் உயிர்களின் இரண்டு காரணங்களாகவும் இருக்கிறார் -- அவரே படைத்தார். அவரிலிருந்தே படைத்தார்.

"இந்த உலகம் இருப்பது அதன் பின்னால் இறைவன் ஒருவர் இருப்பதைச் சுட்டிக்காட்டுகிறது என்பதை இந்த சூத்திரம் கூறுகிறது. இந்த உலகையும் உயிர்களையும் அவற்றின் அமைப்பையும் காட்டி இத்தகைய அற்புதமான உயிர்களையும் உலகையும் படைத்ததன் காரணமாக இறைவன் எல்லாம் அறிந்தவர் (ஸர்வஜ்ஞ:) எல்லாம் வல்லவர் (ஸர்வ சக்திமான்) என்று விளக்குகிறார் உரையாசிரியர் ஆதி சங்கரர்."

**உலகத்தின் நான்கு இயல்புகள்**

உலகத்தினுடைய நான்கு இயல்புகளை ஆதி சங்கரர் சுட்டிக்காட்டுவதாக சுவாமி ஆசுதோஷானந்தர் கூறுகிறார். "இந்த உலகம் எண்ணற்ற உருவங்களாலும் பெயர்களாலும் உருவாக்கப்பட்டது. எண்ணற்ற அனுபவங்களைப் பெறுகின்ற எண்ணற்ற உயிர்களை உடையது. ஒவ்வோர் அனுபவமும் குறிப்பிட்ட இடத்தில் குறிப்பிட்ட காலத்தில் குறிப்பிட்ட காரணத்திற்காக நடைபெறுகின்ற தன்மை உடையது. சிந்தனைக்கும் எட்டாத எண்ணற்ற அமைப்புகளுடன் கூடியது. ஸ்ரீசங்கரர் கூறுகின்ற இந்த ஒவ்வோர் இயல்பும் ஆழ்ந்த சிந்தனைக்கு உரியது. இன்றைய விஞ்ஞானத்தின் துணையுடன் பார்க்கும்போது பிரமிப்பூட்டும் சித்திரத்தைத் தரக்கூடியது."[5] என்கிறார் சுவாமி ஆசுதோஷானந்தர். 'ஸ்ரீசங்கரர் பிரம்ம விசாரத்தை மூன்று முக்கிய விதத்தில் செய்துள்ளார் எனலாம். சுருதி, யுக்தி, அனுபவம் என்ற மூன்றையும் தனது விளக்கத்தில் பயன்படுத்தியுள்ளார். பூர்வ மீமாம்சகர்கள் நூற்று சதவீதம் தர்க்கத்தை விட்டு விடுவார்கள். நையாயிகர் நூற்று சதவீதம் தர்க்கத்திற்கு முக்கியத்துவம் அளிப்பார்கள். வேதாந்திகள் (இங்கு ஸ்ரீசங்கரர்) சுருதி வாக்கியங்களையும் எடுத்துக் கொண்டு, தர்க்கத்தின் அடிப்படையில் விசாரத்தை மேற்கொண்டு, அனுபவங்களையும் சேர்த்து விளக்கத்தை மேற்கொள்வார்கள்.'[6]

**நிறைவுரை**

பிரம்ம சூத்திரத்தின் இரண்டாவது சூத்திரம் உலகம் எதனால் தோன்றியதோ அதுவே இறைவன் என்று கூறுகிறது. இது பல்வேறுபட்ட விளக்கங்களை யூகித்து அறியும் வண்ணம் இருக்கிறது. ஆதி சங்கரர் அளித்த விளக்கத்தை மட்டுமே இக்கட்டுரையில் கண்டோம். கயிறு பாம்பாகத் தோன்றுகிறது என்ற அவரது விளக்கம் நமது நாட்டு அறிஞர்களை மட்டுமல்லாமல் பல்வேறு அயல் நாட்டு அறிஞர்களையும் ஆராயத் துாண்டியது எனலாம். அவரின் அத்வைதத் தத்துவத்தின் அடிப்படையிலேயே வேதாத்திரி மகரிஷியும் தனது எளியமுறை குண்டலினி யோகத்தை வடிவமைத்துள்ளார்.

இறைவன் ஒருவர் இருக்கிறார். அவர் எல்லையற்ற ஆற்றல் படைத்தவர். அவரை அறிந்து அவரை அடைவதே வாழ்வின் லட்சியம். ஆனால் அவரோ சிந்தனைக்கு எட்டாதவர். அவரை அறிவது எப்படி? அடைவது எப்படி? இறைவனை அடைவதற்கான வழி சாஸ்திரங்களே என்று பிரம்ம சூத்திரத்தின் மூன்றாவது சூத்திரம் கூறுகிறது.

**துணைநூற்பட்டியல்**

1. பிரம்ம ஸூத்ரம், சுவாமி ஆசுதோஷானந்தர், ஸ்ரீராமகிருஷ்ண மடம், சென்னை, 2013. ப.15.
2. இந்திய தத்துவ ஞானம், கி.லட்சுமணன், பழனியப்பா பிரதர்ஸ், சென்னை, 2013. ப.309.
3. மேலது, ப.316.
4. பிரம்ம ஸூத்ரம் விளக்கியவர் சுவாமி ஆசுதோஷானந்தர் ஸ்ரீராமகிருஷ்ண மடம் சென்னை 2013 ப.17.
5. மேலது, ப.18.
6. சுவாமி குருபரனாந்தா அவர்களின் பிரம்ம சூத்திர உரை (33 உரைகள்) (Audio)